1982 பிப்ரவரி 10]

கொண்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க வில்லை. ஆகவே கலெக்டர் ஒருவராக இருந்தாலும் கூட அவருக்குக் கீழே பல நிர்வாக அதிகாரிகளை வைத்துக் கொண்டு நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமநாத புரம் மாவட்டத்தை பிரித்துவிட வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகும் அதற்குத் தலைநகரை எங்கே வைப்பது என்பதில்தான் அது தடைப்பட்டிருக்கின்றது. மையஸ் கமிஷன் சிபாரிசின்படி அந்த மாவட்டத்தின் தலைநகர் எப்படி இருக்கவேண்டும் என்று பார்த்தால் சிவகங்கைதான் என்று நாம் முடிவுக்கு வரவேண்டி இருக்கின்றது. ஆகவே, பொதுமக்க ளுடைய வசதியைக் கருதி சிவகெங்கையைத் தலைநகராகக் கொண்டு அந்த மாவட்டத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா !

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே சொல்லி இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து அதற்கு தலைநகர் எப்படி ஏற்படுத்துவது என்பது பற்றி எல்லாம் அவர்கள் சொன்னதற்குப் பிறகு நான் விளக்க வேண்டிய தில்லை. மேலும், மொத்தமாக சமுதாயத்தினுடைய நலனைக் கருதி காரியங்கள் செய்யப்படுகின்றபோது தங்களுடைய சொந்த நன்மையைக் கருதி அதாவது தங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே தான் தலைநகர் வரவேண்டும் என்று பெரும்பாலோர் கருதுவ தால்தான் சிக்கல் ஏற்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அரக்கோணம் தாலுக்காவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட நிலம்.

*வினா எண். 124—திரு. வி. வி. சுவாமிநாதன் மற்றும் திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய செஞ்சிலுவை சங்கத்தினர் (Disaster relief complex) கட்டுவதற்காக அரக்கோணம் தாலுகாவில் இலவச மாக நிலம் கேட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு இலவசமாக எவ் வளவு நிலம் வழங்கி உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, செஞ்சிலுவைச் சங்கத்தினர் துயர் துடைப்புக் கூடம் கட்டுவதற்காக 10 ஏக்கர் நிலம் இலவசமாக அரசு கொடுத்திருக்கின்றது.

[1982 பிப்ரவரி 10

திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதுவரையில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட புயல் பாதுகாப்பு இல்லங்கள் மொத்தம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 25 இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, அவர்கள் இருபது இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து இதைப் போன்று கட்டுவதற்குப் பணம் தருவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றது.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெற்றிருக்கிற நிலம் அவர்கள் எந்தக் காரியத்திற்காகக் கேட்டார்களோ அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்துகிறார்களா என்பது கண்காணிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எந்த நிறுவனத்திற்கும் எவ்வளவு நிலம் கொடுத்தாலும் அந்த நிறுவனம் எதற்காக கேட்கிறதோ அதற்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று கண்டிஷன் போட்டு அவர்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட கண்டிஷனிலே இருந்து அவர்கள் விலகிச் செல்வார்களேயானால் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமலேயே அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது.

திரு. மு. சுந்தரம் : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே இந்தியா ஸ்டீல்ஸ் என்ற தொழிற்சாலை இருக்கின்றது. அந்த தொழிற்சாலையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பல மைல் தூரத்திலே இருந்து வேலைக்கு வருவது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வீட்டுமனை வேண்டும் என்று அரசிடத்திலே கோரி இருக்கிறார்கள். ஆகவே..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி டிசாஸ்டர் ரிலிப் சென்டர் ஏற்படுத்துவது பற்றி. ஆகவே, வீடுகட்ட நிலம் பற்றி இப்போது கேட்கக் கூடாது.

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையின் 125ஆவது பிறந்த நாள் விழா.

*வினா எண் 125—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பெரியார்களுக்கு அரசின் சார்பில் விழா எடுக்கும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் யார் யாருக்கு விழா எடுக்கப்பட்டது ?